IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,ARAKKONAM, RANIPET DISTRICT.

**PAGE NO.05/2013**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII of Criminal Procedure)

| | | | | |
|---|---|---|---|---|
| Calender | : | CC.231/2012 | | |
| Miscellaneous | : | | | |
| Preliminary Register | : | | | |
| Sessions | : | | | |
| Deposition of witness for | : | Prosecution | : | PW-6 |
| | | Defence | : | |
| | | Court | : | |
| Name | : | லலிதா | | |
| Father's Name | : | மனோகரன் | | |
| Village | : | காட்டுப்பாக்ம் | | |
| Taluk | : | அரக்கோணம் | | |
| Caste | : | - | | |
| Calling | : | கொளுத்து வேலை | | |
| Religion | : | இந்து | | |
| Age | : | 46 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 11.02.2020

2007ம் ஆண்டு தேதி மாதம் ஞாபகம் இல்லை. காலை 6 மணிக்கு வேலைக்கு வருவதற்காக ஆட்டோவில் வந்தோம். ஆட்டோவை ஏழுமலை என்பவர் ஓட்டி வந்தார். ஆட்டோ ஓட்டும் பையன் குடித்துவிட்டு இருந்தான். வண்ணாமேடு என்ற இடத்தில் என்ன ஆனது என்றே தெரியவில்லை வேனை உருட்டி விட்டான். டிரையின் வந்து விடும் என்று சீக்கிரமாக வண்டியை ஓட்டி வந்தான். எனக்கு தலையில் அடிப்பட்டது. என்னுடன் பயணம் செய்த மல்லிகா என்பவர் இறந்து விட்டார். மற்றவர்கள் பெயர் தெரியவில்லை. பழனி என்பவருக்கு அடிப்பட்டு இருந்தது.

நீதிமன்ற கேள்வி ?

விபத்துக்குள்ளானது ஆட்டோவா வேனா என்றால் வேன். ஆட்டோ ரிப்பேர் ஆகிவிட்டது என்று வேனில் வந்தோம்.

போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

கு.வி.

வேன் யாருடையது என்றால் மணிகண்டனுடையது. வேனில் போனதற்கு டிக்கெட் எவ்வளவு என்றால் 10 ரூபாய். 10 ரூபாய் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். யாரிடம் கொடுத்தேன் என்றால் ஏழுமலையிடம். அது எந்த பள்ளிகூடத்து வேன் என்றால் காட்டுப்பாக்கத்தில் இருக்கும் பள்ளியின் வேன். வேன் போன ரோடு பராமரிப்பு இல்லாமல் குண்டும் குழியுமாக இருக்கும் ரோடு என்றால் சரிதான். 10 பேர் போகும் வேனில் 20 பேர் போனது சரியா தவறா என்றால் தவறுதான். அந்த ரோட்டில் வேகமாக ஓட்ட முடியாது என்றால் நிதானமாக தான் ஓட்டினார். வேன் வந்து நின்றபோது 20 பேரும் சென்று ஏறினோம் என்றால் சரிதான். அவர்களே அழைத்து ஏற்றினார்கள். நான் சொல்வது எல்லாம் பொய் என்றாலும், ஆட்டோவில் விபத்து ஏற்பட்டதாகவும், வேனில் விபத்து ஏற்பட்டதாகவும், மாற்றி மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ஆட்டோவில் ஆக்ஸிடண்ட் ஆனதாக சொல்லவில்லை ஆட்டோ ரிப்பேர் என்று தான் சொன்னேன். கட்டிட வேலை செய்யும் போது விபத்து ஏற்பட்டது என்றாலும், நான் பொய்யாக ஆட்டோவில் ஏற்பட்டதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. விபத்து நஷ்டயீடு பெறுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.